**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்/சார்பு நீதிமன்றம், போளூர்.**

**முன்னிலை :திரு.S.செந்தில்பாபு, எம்.ஏ, எம்.எல்.,**

**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி, போளூர்.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் நாள் சனிக்கிழமை**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை மனு எண்.471/2024**

**CNR No. TNTM22-001205-2024**

1. பெரியகுழந்தை அம்மாள் (Died)
2. வேளாங்கண்ணி
3. ஆஷா
4. அப்பு
5. கண்ணன் @ அலெக்ஸ் ....மனுதாரர்கள்

(Amended as per order in IA 2/24 dt 17.02.2025)

//எதிர்//

1. R.வெங்கடேசன்
2. தமிழ்நாடு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கார்ப்ரேஷன், விழுப்புரம். .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 07.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.Y.P.கணேசன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தோன்றத்தரப்பினராக கருதியும் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகள் கேட்டும், வழக்கு ஆவணங்களை ஆய்வு செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

**ஆணையுரை**

மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.10,00,000/– செலுத்த கோரியும், மேற்படி தொகைக்கு இம்மனு தாக்கல் செய்த நாளிலிருந்து 12% வட்டி செலுத்த கோரியும் மோட்டார் வாகனச்சட்டம் 1988 பிரிவு 166 மற்றும் உ/இ மோட்டார் வாகன தீர்ப்பாய விதி 3 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவில் கண்ட சங்கதிகளின் சுருக்கம் வருமாறு:**

2 ம் மனுதாரரின் கணவரும், 3 முதல் 5 மனுதாரர்களின் தகப்பனாருமான

முருகன் என்பவர் கடந்த 05.03.2015 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் வேலூர் to திருவண்ணாமலை சாலையில் சி.சி.ரோடு, கலைமகள் ITI அருகில் சைக்கிள் ரிக்சாவை ஓட்டிக்கொண்டு சென்றபோது திருவண்ணாமலை – திருப்பதி செல்லும் TN 25 N 0140 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், வாகனத்தை ஓட்டி வந்து முருகன் ஓட்டி சென்ற சைக்கிள் ரிக்சா மீது மோதியதால் முருகன் என்பவருக்கு உடல்பகுதி மற்றும் தலை முழுவதிலும் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்ததால் உடனடியாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அன்றைய தினமே இரவு 12.50 மணிக்கு சிகிச்சை பலனின்றி காலமாகி விட்டார். மேற்படி விபத்து குறித்து கண்ணமங்கலம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இறந்த முருகன் என்பவர் தான் கூலியாக வேலை செய்து மாதம் ரூ.15,000/– வருமானம் ஈட்டி தனது குடும்பத்தை பராமரித்து வந்தார். அவர் திடீரென்று இறந்துவிட்டதால் மனுதாரர்கள் மனதளவிலும், அவர்களது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு கூட போதிய வருமானமும் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரராகவும், விபத்து ஏற்படுத்திய வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு உரிமையானது என்பதால் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்கள்.

3) **<u>2–ம்எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். இம்மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். உண்மையில் கடந்த 05.03.2015 அன்று பேருந்து எண்.TN 25 N 0140 கொண்ட அரசு பேருந்து ஓட்டுநர் வேலூரிலிருந்து நிதானமாகவும், கவனமாகவும் சாலை விதிகளுக்கு உட்பட்டும் திருப்பதி நோக்கி சென்று கொண்டிருக்கையில் 17.30 மணியளவில் வாழியூர் கூட்டு சாலை அருகே எதிர்திசையில் சாலை விதிகளை சற்றும் பின்பற்றாமல் ஒரு மூன்று சக்கர சைக்கிள் ரிக்சாவில் ஒருவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு தன்னிலை மறந்து தனது பாதையை விட்டு சாலையின் மையக்கோட்டை தாண்டி குடிபோதையில் தல்லாடி வருவதை பார்த்த கழக ஓட்டுநர் விபத்தினை தவிற்கும் பொருட்டு பேருந்தை பிரேக் அடித்து நிறுத்திவிட்டார். இருந்தபோதிலும் சைக்கிள் ரிக்சா ஓட்டுநர் தனது

வலதுபுறம் ஏறிவந்து கழக பேருந்து முன் வலது பக்க முனையில் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார். எனவே, இந்த விபத்திற்கு ரிக்சா ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்பதால் கழக ஓட்டுநர் எந்தவிதத்திலும் பொறுப்பாகமாட்டார். அத்துடன் மனுதாரர்கள் இறந்தவரின் வயது, வருமானம் மற்றும் வாரிசு ஆகியவற்றை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும், மனுதாரர்கள் திருமணம் முடித்து தனியாக வசித்து வருவதால் இறந்த முருகன் என்பவரின் வருமானத்தை நம்பி அவர்கள் இல்லை என்பதால் நஷ்டஈடு பெற இயலாது. எனவே, இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) மனுதாரர் தரப்பில் 2ம்மனுதாரர் வேளாங்கண்ணி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ–6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் ஆஷா என்பவர் ம.சா.2 ஆக சாட்யிம் அளித்துள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வெங்கடேசன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**5) <u>தீர்வுக்குரிய பிரச்சனைகள் :</u>**

1. விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது ?
2. மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையை யார் கொடுக்க வேண்டும் ?
3. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

6) **<u>பிரச்சனை எண் 1 மற்றும் 2க்கான தீர்வு :</u>**

மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், கடந்த 05.03.2015 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் வேலூர் to திருவண்ணாமலை சாலையில் சி.சி.ரோடு, கலைமகள் ITI அருகில் சைக்கிள் ரிக்சாவை ஓட்டிக்கொண்டு சென்றபோது திருவண்ணாமலை – திருப்பதி செல்லும் TN 25 N 0140 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், வாகனத்தை ஓட்டி வந்து முருகன் ஓட்டி சென்ற சைக்கிள் ரிக்சா மீது மோதியதால் முருகன் என்பவருக்கு உடல்பகுதி மற்றும் தலை முழுவதிலும் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்ததால் உடனடியாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அன்றைய தினமே இரவு 12.50 மணிக்கு சிகிச்சை பலனின்றி காலமாகி விட்டார் என்றும், மனுதாரர்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்குமாறு வாதிட்டார்.

7) மனுதாரர் தரப்பில் 2ம் மனுதாரர் வேளாங்கண்ணி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, கண்ணமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.39/2015 கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல், முருகன் பிண கூராய்வு அறிக்கை சான்றிட்ட நகல், முருகன் இறந்த இறப்பு அறிக்கை, முருகன் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல், 2 முதல் 5 வரையிலான மனுதாரர்களின் ஆதார் அட்டைகள் நகல், முருகன் வாரிசு சான்றிதழ் நகல் ஆகியவை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடம், நடைபெற்ற விதம் ஆகியவை குறித்து மனுவில் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்கள் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை ஒத்துரைத்து ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

8) அத்துடன் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலிக்கையில் கடந்த 05.03.2015 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் வேலூர் to திருவண்ணாமலை சாலையில் சி.சி.ரோடு, கலைமகள் ITI அருகில் சைக்கிள் ரிக்சாவை ஓட்டிக்கொண்டு சென்றபோது திருவண்ணாமலை – திருப்பதி செல்லும் TN 25 N 0140 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், வாகனத்தை ஓட்டி வந்து முருகன் ஓட்டி சென்ற சைக்கிள் ரிக்சா மீது மோதியதால் முருகன் என்பவருக்கு உடல்பகுதி மற்றும் தலை முழுவதிலும் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்ததால் உடனடியாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அன்றைய தினமே இரவு 12.50 மணிக்கு சிகிச்சை பலனின்றி காலமாகி விட்டார் என்று சொல்லப்பட்டு மேற்படி அரசு பேருந்து ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், எ.ம.சா.1 தனது குறுக்கு விசாரணையின்போது

**"இந்த விபத்து சம்மந்தமாக கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்."**

என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேற்கண்ட ம.சா.ஆ.1க்கு எதிராக எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையில் அந்த ஆவணத்தின் அடிப்படையில் அதில் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படிதான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற முடிவிற்கு இந்த நீதிமன்றம் வருகிறது. எனவே பேருந்து ஓட்டுநர் இவ்விபத்திற்கு பொறுப்பாகாத நிலையில் மனுதாரர்களுக்கு நட்டஈடு வழங்க எதிர்மனுதாரர்கள்

கடமைப்பட்டவர் அல்லர் என்ற 2ம் எதிர்மனுதாரரின் கூற்று ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை.

9) மேலும், ம.சா.1 இறந்தவரின் மனைவியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில், அவர் தனது குறுக்கு விசாரணையின்போது

**"1ம் எதிர்மனுதாரர் பேருந்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் வேளாங்கண்ணி தான் சைக்கிள் ரிக்சாவை ஓட்ட தெரியாமல் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுனரின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல"**.

என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சம்பவம் நடைபெற்ற இடம், நடைபெற்ற விதம் ஆகியவை குறித்து மனுவில் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்கள் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை ஒத்துரைத்து ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் 1ம் எதிர்மனுதாரராகவும், விபத்து ஏற்படுத்திய வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதால் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்கள் என்ற மனுதாரர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

10) மேலும், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர்கள் கூறுகிற வகையில் விபத்து நடந்துள்ளது என்பது மேற்படி ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 சான்றாவணங்களின் வாயிலாக மனுதாரர்கள் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இவ்வாயம் தீர்வு காண்கிறது. மேலும், ம.சா.2 தனது குறுக்கு விசாரணையில்

**"எனக்கு திருமணம் ஆகவில்லை. 4ம் மனுதார் அப்புவிற்கு திருமணம் ஆகி அவர் தனது குடும்பத்துடன் தனியாக இருக்கிறார் என்றால் சரிதான். நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில்தான் இருக்கிறோம். 4ம் மனுதாரர் அப்பு கட்டிட கட்டுமான வேலை பார்த்து அவர் வருமானத்தில் தனது குடும்பத்தை கவனித்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் மனுதாரர் கண்ணன் விவசாயம் கூலியாக வேலைக்கு செல்வார்."**

என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து 2 மற்றும் 3 மனுதாரர்கள் மட்டுமே இறந்த முருகனின் வருமானத்தை சார்ந்துள்ளார்கள் என்றும், 4 மற்றும் 5ம் மனுதாரர்கள் திருமணம் முடித்து இறந்தவரின் வருமானத்தை சார்ந்து இல்லை என்பது தெரியவருகிறது. எனவே, 2ம் மனுதாரரர் இறந்த முருகனின் மனைவி என்ற முறையிலும், 3ம் மனுதாரர் இறந்த முருகனின் திருமணமாகாத மகள் என்ற முறையிலும் 2 மற்றும் 3

மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்கதக்கது என்றும், 4 மற்றும் 5 மனுதாரர்கள் திருமணம் முடித்து அவர்அவர் தனியாக வேலை செய்து தனது குடும்பத்தை பார்த்து வருகிறார்கள் என்பதாலும், அவர்கள் இறந்த முருகன் வருமானத்தை சார்ந்திருக்கவில்லை என்பதால் 4 மற்றும் 5 மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரே காரணம் என்று தெரிய வருகிற நிலையிலும், விபத்தை ஏற்படுத்திய வாகனம் 2ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான வாகனம் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் செய்கைக்காக 2ம் எதிர்மனுதாரர் 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று முடிவு செய்து அவ்வாறே பிரச்சனை 1, 2 க்கு இவ்வாயம் விடையளிக்கிறது.

11) **<u>பிரச்சனை எண் 3 க்கான தீர்வு :</u>**

இறந்துபோன முருகனுக்கு சம்பவ சமயத்தில் வயது 55 என்று கூறுவதைப் பொறுத்து மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.4 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சான்றாவணத்தில் இறந்தவருக்கு வயது 55 என்று குறிப்பிட்டுள்ளது. எனவே, இறந்தவர் 55 வயதுடையவர் என்று இவ்வாயம் முடிவு செய்கிறது. இறந்தவர் சம்பவ சமயத்தில் சைக்கிள் ரிக்ஷா மூலம் மூட்டை சுமைதூக்கும் கூலிவேலை செய்து வந்தார் என தெரிவித்திருந்தாலும், மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில்

**"விபத்தின்போது எனது கணவருக்கு நிரந்தர வேலை கிடையாது என்றால் சரிதான். கூலிக்கு மூட்டை தூக்கி சம்பாதிப்பார். எனது கணவர் மாதம் ரூ.15,000/- சம்பாதிப்பார் என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்."**

என்று சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் ம.சா.2 தனது குறுக்கு விசாரணையில்

**"எனது தந்தையின் வயது மற்றும் வருமானம் மாதம் ரூ.15,000/- சம்பாதிக்கிறார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்."**

என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இறந்துபோனவரின் வயதை கருத்தில் கொண்டும், விபத்து நடந்த காலத்தை கருத்தில் கொண்டும், அவர் சாதாரண கூலி வேலை செய்தால் கூட மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/- பொருளீட்டி இருக்க வாய்ப்புள்ளது என்று இவ்வாயம் முடிவு செய்கிறது. எனவே, மேற்படியாரின் பொருளீட்டும் திறன் தோராயமாக மாதம் ஒன்றுக்கு ரூ.7,000/- என இத்தீர்ப்பாயம் மதிப்பிடுகிறது.

12) இறந்தவரின் எதிர்கால வருமான இழப்பாக 60 வயதுக்குட்பட்ட ஒரு நபர் தனிப்பட்ட வேலை செய்து வரும் பட்சத்தில் அவருக்கு அவரது மாதாந்திர ஊதியத்திலிருந்து 10 சதவீதம் இழப்பீடு கொடுக்கலாம் என்று (High lights of the National Vs Pranay Sethi & ors.by 5 Branch SC Bench on 31.10.2017) முன்மாதிரி தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இறந்த நபரின் மாதாந்திர ஊதியமான ரூ.7,000/-லிருந்து, அவரது 10% இழப்பீடு தொகையை ரூ.700/-ஐயும் சேர்த்து ரூ.7,700/- வருகிறது. மேற்படி தொகையில் இறந்துபோன நபர் திருமணமானவர் என்பதாலும், அவரது சொந்த மற்றும் தனிப்பட்ட செலவினங்களுக்காக 1/4 பங்கை கழிக்க வேண்டும் என்று 2009 (2) TNMAC 1 (SC) (Smt. Sarla verma and others Vs Delhi Transport Corporation and others) என்ற முன்மாதிரி தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 1 முதல் 3 வரையிலான மனுதாரர்கள் மட்டுமே இறந்தவரின் வருமானத்தை சார்ந்திருந்ததால் மொத்த தொகையான ரூ.7,700/-லிருந்து 1/3 பங்கான ரூ.2,566/-யை கழித்து அவரது மொத்த வருமானம் ரூ.5,134/- என கணக்கிடப்படுகிறது.

13) மோட்டார் வாகனச் சட்டம் அட்டவணை எண் 2ன்படி பெருக்கல் எண்.11ஐ பயன்படுத்தி இழப்பீடு தொகையை கணக்கிட்டு, இறந்த நபரின் வருமான இழப்பு ரூ.5,134 x 12 x 11 = ரூ.6,77,688/- எனவும், இறந்துபோன நபரின் இறுதிச்சடங்கிற்காக ரூ.15,000/- எனவும், 1ம் மனுதாரர் தனது வாழ்க்கை துணையை இழந்தமைக்காக ரூ.40,000/- எனவும், ஆக மொத்தம் இழப்பீடு தொகையாக ரூ.7,32,688/- 2ம் மனுதாரர் மனைவி என்ற முறையில் அவருக்கு ரூ.3,66,344/-ம் 3ம் மனுதாரரர் இறந்த முருகனின் திருமணமாகாத மகள் என்ற முறையில் அவருக்கு ரூ.3,66,344/-ம், விபத்தில் இறந்த முருகன் என்பவருக்கு சட்டப்படியான வாரிசுகள் என்ற முறையில் ம.சா.ஆ.6 சான்றாவணத்தின் அடிப்படையில் 2 மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது எனவும் 4 மற்றும் 5ம் மனுதாரர்கள் திருமணம் முடித்து இறந்தவரின் வருமானத்தை சார்ந்து இல்லாததால் அவர்களுக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என இந்த பிரச்சனைக்கு இத்தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

14) முடிவில், இம்மனு செலவுத்தெகையுடன் அனுமதிக்கப்பட்டு, மொத்த இழப்பீட்டு தொகையான ரூ.7,32,688/-ல் இறந்துபோன நபரின் வருமானத்தை சார்ந்துள்ள 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.3,66,344/- வழங்க உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீடு தொகை ரூ.7,32,688/- க்கு இந்த மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதிவரை 7.5% வட்டியுடன்

2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு RTGS or NEFT வழியாக A/c No.42859463618 என்ற இந்நீதிமன்ற கணக்கிற்கு நேரடியாக செலுத்தி வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் இழப்பீடு தொகைக்கான மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை 10 தினங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.14,327/–என நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் சரி பார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU — Digitally signed by S SENTHILBABU Date: 2026.04.18 17:52:26 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி,**
**போளூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>**

ம.சா.1– வேளாங்கண்ணி (2ம் மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | கண்ணமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.39/2015ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல். |
| ம.சா.ஆ.2 | – | பிண கூராய்வு அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.3 | – | இறப்பு அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.4 | – | இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.5 | – | 2 முதல் 5 மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 | – | முருகனின் வாரிசு சான்றிதழ் நகல் |

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>**

எ.ம.சா.1 – வெங்கடேசன்

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

S SENTHILBABU — Digitally signed by S SENTHILBABU Date: 2026.04.18 17:52:34 +0530

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு**
**கோருரிமை தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி,**
**போளூர்.**